# தமிழில் பாடுவோம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரதா சண்முகநாதன்

22-11-2000

Presented

to the Library of the

UNIVERSITY OF PERADENIYA

by MS. VARTHA SHANMUGANATHAN

on 13TH SEPTEMBER 1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் பாடுவோம்

வரதா சண்முகநாதன்
B.A., Dip. Ed., M.A. (LOND)

Donated to University of Peradeniya Library with compliments remembering my student days in 1961-62
Varatha Shanmuganathan
18.10.97

520028

520028

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு: 1000 பிரதிகள்
யுவ ஆனி 1995

உரிமை: ஆசிரியருக்கு
திருமதி. வரதா சண்முகநாதன்
9, Wolseley Road
Harrow Middx
U.K. HA3 5RZ

அச்சமைப்பு: மகேந்திரமோகன் குமாரசாமி
(MOHAN TYPESETTING)
(416) 439-0968

அட்டை அமைப்பு: ஆசிரியர்

அச்சுப்பதிவு: Liso Printing
(416) 281-4084

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
22-11-2000
LIBRARY

கல்வித்துறையிலும் கலைத்துறையிலும்
எனக்கிருந்த ஆர்வத்தை மேலும்
மேலும் தூண்டி வளர்த்த என்
அருமைக் கணவர் **நாகரத்தினம்**
**சண்முகநாதனுக்கு**
இந்நூல் சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

"தமிழில் [redacted] பாடுவோம்" என்ற இந்நூலின் பகுதி ஒன்றிலுள்ள இருபத்தைந்து பாடல்களும் இசையோடு பாடப்பட்டு ஒலிப்பதிவு நாடாவாக வெளிவந்துள்ளது. பாடல்களுக்கு இசை அமைத்துப் பாடியவர் கானபூஷணி அம்பிகா தாமோதரம், வயலின் வாசித்தவர் சங்கீத வித்வான் ஞானாம்பிகை பத்மசிகாமணி, மிருதங்கமும் தப்ளாவும் சேர்த்து வழங்கியவர் செல்வன் யொனாதன் பரராஜசிங்கம்.

வெளிநாடுகளில் வாழும் தமிழ்ப் பிள்ளைகள் தமிழைப் பாடல் மூலம் கற்றுணர்வதற்கும் தமிழின் இனிமையை இசை வடிவில் சுவைப்பதற்குமாக இப் பாடல்கள் எளிய நடையில் பாடப் பட்டவையாகும்.

மிகுதிப் பாடல்களைப் பாடி மகிழ விரும்புவோரது தேவைகளைப் பூர்த்தி செய்யவே அவைகள் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன.

தமிழன்னைக்கு ஒரு தாழ்மையான அஞ்சலி செலுத்து முகமாகவே எழுந்தது இந்நூல். சிறுவரும், இளைஞரும் மாத்திரமல்ல வளர்ந்தோரும் இந்நூலிலுள்ள பாடல்களைப் படித்தும், பாடியும் இன்புறலாம். இந்நூலை வெளியிட உதவிய அனைவருக்கும் எனது நன்றி உரித்தாகுக.

–வரதா சண்முகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

## பகுதி 1


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கடவுள் | ... 7 |
| 2. | ஈழத்து வளநாடு | ... 8 |
| 3. | பூங்கா | ... 9 |
| 4. | தேனீ | ...9 |
| 5. | மீன்கள் | ...10 |
| 6. | நிலா | ...10 |
| 7. | பந்தடிப்போமே | ...11 |
| 8. | ஓடம் | ... 11 |
| 9. | நல்லை நகர் நாவலர் | ... 12 |
| 10. | தைப்பொங்கல் | ... 13 |
| 11. | பழங்கள் | ... 14 |
| 12. | சிந்து வெளி நாகரீகம் | ... 15 |
| 13. | கடற்கரை | ... 16 |
| 14. | எங்கள் வீட்டுத் தோட்டம் | ... 16 |
| 15. | பிறந்தநாள் | ... 17 |
| 16. | இலங்கை | ...17 |
| 17. | கண்ணான கதிரவன் | ...18 |
| 18. | மயில் குயில் கிளி | ...19 |
| 19. | அம்மாவின் அப்பம் | ... 20 |
| 20. | வண்டி | ... 20 |
| 21. | குருவிக் கூண்டு | ... 21-22 |
| 22. | நயாகரா நீர்வீழ்ச்சி | ... 23 |
| 23. | பூவழகு | ... 24 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. பூனைக்குட்டி ... 25
25. நேரான பாதை ... 25

## பகுதி 2

26. எங்கள் வீட்டு நாய் ... 26
27. பருந்து ... 26
28. குருவி ... 27
29. மரங்களே, மாரிகால மரங்களே! ... 27
30. குயில் ... 28
31. லண்டனில் பழங்களும் காய்கறியும் ... 29
32. பலன் கருதாப் பண்பு வேண்டும் ... 30
33. இவ்வுலகம் பொன்னுலகம் ... 31
34. மனித மனம் ... 32
35. எப்போ தோன்றின? .. 33-35
36. புதியதோர் உலகம் செய்வோம் ... 36-38
37. வேளாங்கணி அம்மை ... 39
38. லூட்ஸ் மாதா ... 39
39. சிற்பரமே ... 40

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி 1

## கடவுள்

அம்மா என்றால் அன்னை
அப்பா என்றால் தந்தை
தெய்வம் என்றால் கடவுள்
தேவன் என்றால் கடவுள்

கடவுள் வாழும் வீடு
கருணை உள்ள நெஞ்சம்
கடவுள் நம்மைக் காக்கும்
கருணை காட்டி வாழ்வோம்

அருள் தருவான் ஆண்டவன்
அம்மா அப்பா போன்றவன்
ஈசன் அவன் தாளினை
ஏத்தி ஏத்தி வணங்குவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து வளநாடு

ஈழத்து வள நாடு
இனிய நல்ல நாடு
பாலும் தேனும் நிறைந்த
பழைய பெரும் நாடு

தேங்காய் மாங்காய் பலாக்காய்
தேவைக் கேற்ற பழங்கள்
வாழை தோடை கமுகு
வளமாய்க் கொண்ட நாடு (ஈழ)

எனது பாட்டன் பாட்டி
இருந்த நல்ல நாடு
இங்கு பேசும் மொழியோ
இனிய தமிழ் மொழிதான் (ஈழ)

தமிழை நாமும் கற்போம்
தமிழைப் பேசி மகிழ்வோம்
தமிழில் பாட்டுப் பாடி
தாயைப் போலக் காப்போம் (ஈழ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூங்கா

வசந்த காலப் பூக்கள்
வண்ண வண்ணப் பூக்கள்
சிவப்பு நீலம் மஞ்சள்
சேர்ந்த நல்ல ஊதா

வெள்ளை நிறம் யாரும்
விரும்புகின்ற றோசா
எல்லாம் காணச் செல்வோம்
எங்கள் பூங்கா தன்னில்

# தேனீ

தேனீ தேனீ பறந்து வா
தேனை உண்ண ஓடிவா
பூவைத் தேடி நீயுமே
பூங்காவிற்குப் பறந்துவா

தேனீ தேனீ பறந்து வா
சிறந்த பூவில் இருந்துவா
தேனை உண்டு மகிழ்ந்துவா
சிறகடித்துப் பறந்து வா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீன்கள்

தொட்டியிலே தண்ணீர்
துள்ளுகின்ற மீன்கள்
பச்சை நிறத் தழைகள்
பல நிறத்தில் மீன்கள்

ஓடி ஓடித் திரியும்
ஒரு சிறிய இடத்தில்
உண்மையிலே அவைகள்
ஓட வேண்டும் கடலில்

## நிலா

நிலா நிலா வா வா
நீயும் நானும் ஆடுவோம்
ஊஞ்சல் ஏறி ஆடுவோம்
உயரத் துள்ளி ஓடுவோம்

நிலா நிலா வா வா
நீயும் நானும் ஆடுவோம்
ஊர்கள் எல்லாம் காணுவோம்
ஒன்றாய் விளையாடுவோம்

நிலா நிலா வா வா
நீயும் நானும் ஆடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பந்தடிப்போமே

பாலர் நாங்கள் பாடிப் பாடிப் பந்தடிப்போமே
பறந்து பறந்து ஓடி ஓடிப் பந்தடிப்போமே
(பாலர்)
கையை விரித்துப் பந்தினையே பிடித்திடுவோமே
காலினாலே பந்தினையே உதைத்திடுவோமே
(பாலர்)

# ஓடம்

ஓடுகின்ற ஆற்றினிலே
ஓடம் போகுது
ஒரு மனிதன் ஓட்டுகின்றான்
ஓட யந்திரம்
உல்லாசமாய்ப் போகிறார்கள்
ஓடத்தினுள்ளே
ஒன்று இரண்டு
மூன்று நான்கு
ஐந்து ஆறு பேர்
எல்லாமாய்ச் சேர்த்து விட்டால்
ஏழுபேர்கள் தாம்
எங்கோ சேர்ந்து போகிறார்கள்
ஓடத்தில் ஏறி

ஏலேலோ ஏலே ஏலோ
ஏலேலோ ஏலே ஏலோ
ஓடுகின்ற ஆற்றினிலே
ஓடம் போகுது
உல்லாசமாய்ப் போவோமே
ஓடம் தன்னிலே (ஏலேலோ)

UNIVERSITY OF PERADENIYA LIBRARY
22-11-2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைநகர் நாவலர்

(1822-1879)

நல்லை நகர் நாவலர்
நலங்கள் பல பெற்றவர்
சொல்லில் வாக்கு வன்மையில்
சுடரெனவே விளங்கினார்

சைவமதம் தமிழ்மொழி
தழைக்க வேண்டி நாளுமே
சமய நெறிகள் போற்றினார்
தமிழில் நூல்கள் இயற்றினார்

மக்கள் சுகாதாரமும்
மன அமைதியும் பெற்று
தக்கபடி வாழவே
சைவ நெறியைப் பரப்பினார்

ஈழத்தமிழ் நாடு தான்
ஈன்றெடுத்த நாவலர்
இந்தியத் தென்னாட்டிலும்
இசையுடனே விளங்கினார்

பள்ளிக்கூடம் நிறுவினார்
பாலர் கல்வி போற்றினார்
பைபிள் தமிழில் தந்துமே
பல நெறிகள் காட்டினார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுக் கோவை யந்திரம்
அமைத்துப் பல நூல்களை
அழிந்திடாமல் காத்திட்ட
அவர் பெயரைப் போற்றுவோம்

நாவினிக்கப் பாடுவோம்
நாவலர் தம் புகழினை
நாங்கள் சிறு பாலர்கள்
நாவலரை வாழ்த்துவோம்.

# தைப்பொங்கல்

பொங்கல் விழா தனைத் தமிழர் கொண்டாடுவார்
புதுப் பானை தனைவைத்துப் பொங்கல்
பொங்குவார்
பச்சரிசிப் பால்ப் பொங்கல் சர்க்கரைப் பொங்கல்
பதமாகப் பார்த்தெடுத்துப் பொங்கல் பொங்குவார்

மங்கலமாய் மனைமுன்னே கோலம் போடுவார்
மணி விளக்கை ஏற்றி வைத்து ஒளியைக்
கூட்டுவார்
மாவிலையும் தேங்காயும் மஞ்சளும் வைப்பார்
மக்கள் உள்ளம் குளிர்விக்கும் கும்பம் ஏற்றுவார்

தட்டத்தில் வெற்றிலையும் பாக்கும் எடுப்பார்
தரமான கதலியினைப் பக்கத்தில் வைப்பார்
குங்குமமும் சந்தனமும் நீறும் எடுப்பார்
கோலாகலமாகப் பொங்கல் பொங்குவார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்குக பொங்கல் பொங்கலோ பொங்கல்

வேறு

போற்றிடுவோம் நாம் தமிழர் பொங்கல் நாளைப்
புதுக்கதிரை விளைய வைக்கும் வெய்யோன் பேரில்
ஆற்றுவோம் பணிகள் பல பொங்கும் பால் போல்
அதுவே தான் தமிழர்க்கு அருமைப் பொங்கல்

# பழங்கள்

அப்பிள் பழம் பழுத்திருக்கு
ஆய்ந்துண்டால் அதிகருசி
தோடம்பழம் தொங்குதுபார்
தோலுரித்தால் சுவை சொட்டும்

முந்திரிகைக் குலைதாங்கும்
முத்தான பழமினிப்பே
மாமரத்தில் நிறைந்த கனி
வளமான சுவைக் கனிதான்

பலாப்பழம் பழுத்து நிற்கும்
பசுஞ் சுளைகள் தேனினிமை
வாழைமரத் தோட்டத்து வண்ண
மஞ்சள் பழம் உண்போம்

செக்கச் செவே லென்றந்த
ஸ்ரோபெரியின் தீஞ் சுவைதான்
தினைப்பான மாதுளையின்
சிவப்பு முத்தின் சுவை கூறும் (அப்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்து வெளி நாகரீகம்

சிந்து நதிக்கரை ஓரத்திலே –கி.மு
சேர்ந்த மூவாயிரம் ஆண்டு முன்னே
முந்தைப் பழம் பெரும் நாகரீகம் ஒன்று
முதிர்ந்து வளர்ந்ததாம் கேளுங்கடி

திராவிடர் என்றோர் இனத்தவர் தாம் –அங்கு
சேர்ந்து வளர்த்தனர் பண்பாட்டை
சீரிய வாழ்க்கையைக் கண்டவராம் அவர்
சிறந்த நகர்களை அமைத்தவராம்

சிற்பக் கலையில் சிறந்தவராம் – அவர்
தேவி வழிபாடு கண்டவராம்
அற்புதமாகவே அமைத்திட்ட சாலைகள்
அதி நுட்பமானதாம் கேளுங்கடி

ஹரப்பா மொஹெஞ்சதாரோ என்ற – நகரங்கள்
காண்பவர் மெச்சிய பொன்னகரம்
சிந்து நதிமணல் மூடிடவே அவை
சிதைந்து மறைந்ததாம் மண்ணினுள்ளே

மண்ணினுள் மூடி மறைந்திட்ட போதிலும் – மக்கள்
மகிமை மறைந்துமே மாளவில்லை
இன்னுமவர் தம் பண்பாடெனும் செல்வத்தை
ஏற்றுக் கொண்டே இன்றும் வாழுகிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்கரை

கடற்கரைக் காற்று வீசுதுபார்
கடலலை எல்லாம் மோதுது பார்
கப்பல் கடலில் போகுது பார்
கலங்கரை விளக்கு மின்னுது பார்

கடற்கரை மணலின் மீதினிலே
காற்றுக் கீதம் பாடுது பார்
கடலின் அலையின் ஓசை தான்
கல கல மத்தளம் கொட்டுது பார்.

# எங்கள் வீட்டுத் தோட்டம்

எங்கள் வீட்டுத் தோட்டம்
எல்லோருக்கும் நாட்டம்
இனிய றோசா மலர்கள்
எங்கும் நிறைந்த தோட்டம்

மஞ்சள் சிவப்பு வெள்ளை
மலர்கள் நிறைந்த தோட்டம்
மனதில் இன்பம் ஊட்டி
மகிழ வைக்கும் தோட்டம்

மென்மையான இதழ்கள்
மேல் விரிந்து பார்க்கும்
சின்னஞ் சிறு ஈக்கள்
தேன் எடுக்க ஓடும் (எங்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த நாள்

இன்று எனது பிறந்தநாள்
எங்கள் வீட்டில் கொண்டாட்டம்
அம்மா அப்பா யாவரும்
அநேக பரிசு தந்தனர்

அக்கா அண்ணா மாமா மாமி
அன்புப் பாட்டா பாட்டியோடு
அடுத்த வீட்டு அன்புத் தோழர்
அநேக வாழ்த்துக் கூறினர்.

# இலங்கை

இந்திய நாட்டுத் தென் பகுதியிலே – ஓர்
இன்பத் தீவொன்றினைக் கண்டிடுவோம்
ஏற்றமுடைய அத்தீவினிலே பலர்
என்றும் வளத்துடன் வாழ்ந்தனரே

கன்னலும் செந்நெல்லும் காய்கறியாவுமே –யாரும்
களிப்புடன் அத்தீவில் பெற்றிடலாம்
மின்னும் மரகதம் மேலான முத்துக்கள்
இன்னும் பல வளம் அங்குண்டு காண்

சைவத் திருக்கோயில் பற்பலவாம் – அங்கு
பௌத்த விகாரைகள் பற்பலவாம்
யேசு மரித்தாயின் தேவாலயங்களும்
சிறந்த பள்ளி வாசலுமுண்டாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமெனப் பெயர் பெற்றவளாம் - அவள்
இலங்கை எனப் பெயர் கொண்டவளாம்
சூழும் அலை கடல் அவள் உடையாம் நல்ல
சுந்தரக் கோயில்கள் அவள் அணியாம்

சீனம் முதலான தேசங்களோடவள் - அன்று
சிறப்பாய் வியாபாரம் செய்திருந்தாள்
வானம் முட்டப் புகழ் பெற்றிருந்தாள்
அவள் வளத்தைக் கலக்கினர் ஐரோப்பியர்

கண்ணீர் வடித்துக் கலங்கிடும் காரிகை -தன்
கண்ணைத் துடைத்துக் கலங்குகின்றாள் அவள்
கண்ணீர் துடைப்பவர் யாருமில்லை அவள்
கவலை தணிக்கவோ யாருமில்லை

என்ன பழி செய்தேன் யானு மென்றே அவள்
ஏங்கித் தவிக்கிறாள் மனதினுள்ளே
இல்லையோ தெய்வமும் இவ்வுலகில்
என் துணையாரென மயங்குகிறாள்.

# கண்ணான கதிரவன்

கண்ணான கதிரவனே காவல்புரி நாயகனே
எம்மீது இரக்கம் வைத்து எல்லா வளமும் தந்திடுவாய்
காலாகாலத்தி லந்தக் கருமுகிலும் சுமந்து வந்து
மேலாக எம் வயலுள் விதைத்திட்ட வித்துத் தானும்
முளையாகி முளைத்து வந்து முதிய பயிர் வளர்ந்திடவே
சோனா மாரி பெய்து சுகந் தரவே வையுமப்பா
(கண்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலை சாய்க்கும் நெற்கதிர்கள் தக்கபடிதான் விளைய
தழைத்து வளர்ந்து நிற்கும் வாழை மரக்குலை பழுக்க
பச்சைப் பசேலென்றந்தப் பசிய கீரை முளைத்து வர
அச்சமில்லாது நாமும் அன்புடவே வாழ்ந்திருக்க
(கண்)

சீரான வாழ்வு பெற உன் திருவுள்ளம் இரங்கிடாதோ
ஏர்பூட்டி உழுது வைத்தார் எம்முடைய மூதாதையர்
வரம்புகள் கட்டி வைத்தார் வாழ வழிகாட்டி வைத்தார்
'நீருயர நெல்லுயரும்' என்ற நீதி தன்னை வகுத்து
வைத்தார். (கண்)

நேர்மையுடன் பொறுமைதன்னை நீராகக் கண்டிடுவோம்
ஆர்வத்தோடு கல்வி கற்று நேசப் பயிரை
வளர்த்திடுவோம்
ஒழுக்கம் என்னும் உயர் வரம்பை உயர்த்தி நாமும்
கட்டிடுவோம்
உண்மை தனைப் பேசிப் பேசி ஒற்றுமையாக
வாழ்ந்திடுவோம். (கண்)

# மயில் குயில் கிளி

மயிலே மயிலே ஆடி வா
மகிழ்ந்து நீயும் ஆடி வா
குயிலே குயிலே பாடி வா
கூ கூ என்று கூவி வா

கிளியே கிளியே ஓடி வா
கீதம் பாட ஓடி வா
பிரியமாக அழைக்கின்றோம்
பிள்ளைகள் எம்மை நாடிவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவின் அப்பம்

அம்மா ஒரு நாள் எனக்கு
அப்பம் இரண்டு தந்தார்
அருமையான அப்பம்
அம்மா எனக்கு மூன்று
அப்பம் வேண்டு மென்றேன்
அன்புடன் என் அம்மா
அப்பம் மூன்று தந்தார்
அம்மா நன்றி என்றேன்

(இப்பாட்டினை மாற்றி வேறு சாப்பாட்டு வகைகளைச் சேர்க்கலாம்)

# வண்டி

அப்பா செய்த வண்டி
அழகான வண்டி
சுதா ஓட்டும் வண்டி
சொகுசான வண்டி

தம்பி ஓட்டும் வண்டி
தள்ளி தள்ளி ஓடும்
தள்ளத் தள்ளத் தானே
தாவித் தாவி ஓடிடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
22-11-2008
LIBRARY

பிரியா ஓட்டும் வண்டி
பெரிய நல்ல வண்டி
பிறந்த நாளின் பரிசாய்
பெற்ற நல்ல வண்டி

அம்மா தந்த வண்டி
அழகான வண்டி
அன்புப் பிள்ளை ரூபா
அமுக்கி ஓட்டும் வண்டி

## குருவிக் கூண்டு

கோணற் புளிய மரத்திலொரு
குருவிக் கூண்டு அதில்
கொஞ்சக் காலம் வாழ்ந்தனவே
குருவி இரண்டு

கூடி வாழக் குஞ்சுகளும்
கீச்சுக் கீச்சென
கொஞ்சிக் கொஞ்சிப் பாடினவே
ஆரவாரமாய்

குஞ்சுகளும் சிறகடித்துப்
பறக்கும் சக்தி தான்
குவிந்து வரும் வேளையிலே
குரங்கு ஒன்றுதான்

கோணற் புளிய மரத்திலேறிக்
கோணங்கித் தனமாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டைப் பிய்க்கத் தாவித்
தாவி ஓடி வந்தது

குருவிகளும் குஞ்சுகளும்
கூட்டம் போட்டன
கூச்சலிட்டுக் குரங்கினையும்
கொத்திப் பிய்த்தன

தாய்க் குருவி தந்தையுடன்
குரங்கை முறைத்தது
தன்னை மறந்து குரலை எழுப்பி
ஏச்சுக் கொடுத்தது

'எங்கு வந்தாய் நீ குரங்கு
வானர மிருகம்
எங்கள் கூட்டைப் பிய்ப்பதற்கு
எத்தனை துணிவு?

பறந்து பறந்து காட்டில் நாங்கள்
சுள்ளி பொறுக்கினோம்
பக்குவமாய் அடுக்கி அவற்றால்
கூடு செய்திட்டோம்

புல்லுப் போட்டிட்டோம் நாங்கள்
மெத்தை செய்திட்டோம்
புதிய பஞ்சு காற்றில்வர
பொதிந்து வைத்திட்டோம்

முட்டையிட்டுக் குஞ்சுவைத்துக்
காவல் காத்திட்டோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதி வந்த காற்று மழை
தப்பி வாழ்ந்திட்டோம்
தனித்திருக்கும் குஞ்சுகளைத்
தாக்க வந்தாயோ?
தாய் தந்தை இல்லையென்று
தான் நினைத்தாயோ?

கும்பிட்டாலும் நாமும் உன்னை
விடவே மாட்டோம்
கொத்தி உந்தன் காதினைத் தான்
பிய்க்கப் போகிறோம்'

என்று அந்தக் குருவிகளும்
ஏக்கத் தோடுதான்
இரைந்திரைந்து கொத்திடவே
இளைத்தது குரங்கு

ஏறிவந்த வழி வழியே
இறங்கி ஓடிற்று
'இனிவரவே மாட்டேன்' என்று
இறங்கி ஓடிற்று.

# நயாகரா நீர்வீழ்ச்சி

நயாகரா நீர் வீழ்ச்சி
நாடுவோர் கண்காட்சி
வெண்பனி வீழ்வதுபோல்
வீழ்ந்திடும் நீரலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசிறியே தண்ணீரால்
விளையாட்டாய் நனைத்துவிடும்
ஓடத்தில் போவோரங்கே
ஓடவே முடியாதப்பா

நயாகரா நீர் வீழ்ச்சி
நமக்கெல்லாம் கண்காட்சி
சளசளெனச் சொரிந்து வந்து
சளைக்காது ஓடி விழும்

# பூவழகு

முல்லை மலர் மொட்டு
முகிழ்த்து வரும் ரோஜா
அல்லிமலர் அரும்பு
அரிய கனகாம்பரம்
மல்லிகைப் பூவினங்கள்
மகிழ்வூட்டும் அப்பிள்பூ
இல்லை எனாதபடி
இதழ் விரிக்கும் தாமரை

செம்மை வெண்மை ஆரஞ்சு
சேர்ந்து மகிழ் செவ்வரத்தை
பட்டென்று மணம் வீசும்
பசுமையுள்ள இராத்திரிப்பூ
ஜெறேனியம் மரிகோல்ட்
ஜெயம் காட்டும் காணேஷன்
ஒல்லாந்து நாட்டில் வளர்
உயர்தர ரியூலிப்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த மலர் தானும்
எங்கே வளர்ந்தாலும்
எப்பெயர் தான் பெற்றாலும்
எல்லோருமே தான்
இயல்பாக நாடுவது
பூத்த மலர்களையும்
பொங்கு மலர் அழகினையும்
அதியழகு பூவழகு

## பூனைக்குட்டி

பூனைக்குட்டி பூனைக்குட்டி எங்கு போனாய்
பொன்னான லண்டன் மாநகரம் போனேன்
லண்டன் மாநகரத்தில் எதனைக் கண்டாய்?
நதி கண்டேன்
நதிமேலே பாலம் கண்டேன்
நதிக்கரையில்
வெஸ்ற்மின்ஸ்ரர் மணியைக் கண்டேன்
நான் தூரப் போய்
அந்த ஹைட்பாக் கண்டேன்
நளினமாய்ப் பலர் அங்கே பேசக் கண்டேன்
நானும் தான் திரும்பி எத்தன் வீடு வந்தேன்.

(சிறுவர் ஆங்கிலப் பாடல் ஒன்றின் தழுவல்)

## நேரான பாதை

நேரான பாதையிலே செல்வோம் செல்வோம்
நிலையாக ஓரிடத்தில் நிற்போம் நிற்போம்
சீராக யாவையுமே பார்ப்போம் பார்ப்போம்
சிறப்பான தனிவழியைக் காண்போம் காண்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி 2

## எங்கள் வீட்டு நாய்

எங்கள் வீட்டு நாய் தான்
எழுந்து வாலை ஆட்டும்
என்னைக் கண்டு விட்டால்
எழுந்து வந்து நக்கும்

எலும்புத் தண்டு ஒன்றை
எடுத்து அதற்குப் போட்டால்
என்னை விட்டு அதனை
எடுத்துக் கடித்துப் பார்க்கும்

என்னுடனே அதுதான்
எங்கெல்லாமோ போகும்
என்னை விட்டால் அதற்கு
இனிய நண்பர் இல்லை

## பருந்து

பருந்து வானில் வட்டமிட்டுப்
பறந்து கொண்டே போகுது
பறவைக் கூட்டைக் கண்டதுமே
பதிந்து கீழே தாவுது

பச்சைக் குஞ்சை நெரித்துக் காலில்
பற்றிக் கொண்டே போகுது
பாவம் அந்தக் குஞ்சு தானும்
கத்திக் கொண்டே போகுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருவி

அழகான குருவியொன்று
ஆலமர மீதிருந்து
ஆனந்தமாகப் பாட்டுப் பாட

அங்கே ஒரு வேடன் வந்து
அதனைக் குறிவைத்துப் பார்த்து
அம்பு தனை ஏவிவிட்டுப் பார்க்க

அந்தக் குருவி பறந்து பறந்து
ஆகாயத்தை நோக்கி மேலே
போனதைத் தான் பார்த்து நின்ற
வேடன்

'போகட்டுமே அந்தக்குருவி
பொல்லாத சிட்டுக் குருவி'
என்று சொல்லி வெட்கிச் சென்றான்
வேடன்

## மரங்களே மாரிகால மரங்களே!

மரங்களே மாரிகால மரங்களே!
இலை உதிர்த்து எழில் நிறைந்து
குளிர் எதிர்த்து வாடா நிற்கும் மரங்களே
மரங்களே மாரிகால மரங்களே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மா முனிவர் போல் உலகப்
பந்த பாசத் தொடர் அறுத்துப்
பட்ட மரங்கள் போலே நிற்கும்
மரங்களே மாரிகால மரங்களே

இயற்கை தந்த அனைத்தும் சக்தி
இன்பம் தரும் பூவாய்க் காயாய்க்
காண என்று ஏங்கி நிற்கும்
மரங்களே மாரிகால மரங்களே

உரம் மிகுந்த உங்கள் பட்டை
உள் துளைத்து குளிர் நடுக்க ஒண்ணுமோ?
ஒவெனத்தான் நீங்கள் அலற முடியுமோ?
மரங்களே மரங்களே மாரிகால மரங்களே!

இயற்கை அன்னை விதித்தவிதி
இதுவே யென்று எண்ணி நீங்கள் நிற்கிறீர்
குளிரினையே நாங்கள் வெல்வோம் என்று
கூறி நிற்கிறீர்
மரங்களே மாரி கால மரங்களே!

## குயில்

காக்கைக் கூட்டில் குயில் ஒன்று
கவர்ந்து அதனுடை முட்டைகளை
கோலாகலமாய் குடித்த பின்பு
குள்ளமாய்த் தன் முட்டைகளை
காகக் கூட்டில் இட்டதுமே
கடுகப் பறந்து போனதுவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில பல வாரம் சென்றதுமே
சிறிய பறவைக் குஞ்சுகளைச்
சீராய் இரையும் கொடுத்தணைத்து
சிறப்பாய் வைத்துக் காப்பாற்றி
வாரீர் என்று வழிகாட்டிக் காகம்
வளர்ந்த மரத்தைக் காட்டியதே

குஞ்சுகள் பறந்து பறந்து போய்
கூ கூ என்று கூவினவே
குயிலும் அவற்றின் குரலினையே
குணமாய் அறிந்து கொண்டதுவே
குயிலும் கூவி விளையாடிக்
கூட்டிக் கொண்டு பறந்ததுவே

காகக் கூட்டில் வளர்ந்தாலும்
குஞ்சு குயிலின் குஞ்சென்றால்
கூவிப் பாடத்தான் முடியும்
குழைந்து கரைய முடிவதில்லை
இயற்கை வகுத்த நியதி அது
ஏனென்றால் நான் என் சொல்வேன்.

# லண்டனில் பழங்களும் காய்கறியும்

பழங்களும் காய்கறியும்
பல கதைகள் சொல்லும்
பட்டகதை தொட்டகதை
பலருடனே நெரிந்தகதை
பெட்டிகளில் அடைபட்டுப்
பேரவலப் பட்ட கதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெனியாவில் வாழ்வெடுத்துக்
கென்ரனுக்கு வந்த கதை
இந்திய மண்ணில்
எழிலாய் வளர்ந்தகதை
இத்தாலிய நாட்டில்
இனப்பெருக்கம் செய்தகதை
இஸ்ரவேல் நாட்டில்
இன்பழமாய் முதிர்ந்த கதை
பார்வைக்கும் பல்லிற்கும்
பக்குவமாய் ருசிக்கும் கதை
தேன் சொரியும் தின்பழங்கள்
தினைப்பான காய்கறிகள்

கதை சொல்லி முடிப்பதற்குள்
கலரிகளாய் மாறிவிடும்.

# பலன் கருதாப் பண்பு வேண்டும்

ஔவைக் கிழவி அருமூதாட்டி
அன்றோர் நாளில் அரும்பிய சொற்கள்
இன்று என் நினைவில் எழுபவையாகும்
எவ்விடமாயினும் எங்கெங்கிருப்பினும்
பண்புடன் நாமும் பயன்தரும் வினைகளை
ஏற்றமாக இயற்றிடுவோ மெனில்
பலன் கருதாத பண்பைப் பெற்று
பணிவுடன் வாழப் பழகிடுவோமெனில்
தன்னடி உண்ட தண்ணீரைத் தான்
தாங்கித் தலை மேல் இளநீராகத்
தாகம் தீர்க்கும் தண்சுவை நீராய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேங்காய் வழுவலாய்ச் சிறப்புடன் முதிரும்
சொட்டாய்த் துருவலாய்த் தோன்றும் பாணியில்
வேறு வேறுணவுச் சத்துடன் சேர்ந்து
வேண்டியவாறு விரும்பியே மனிதர்
உண்பொருளாக உதவிடு மந்தத்
தென்னை மரத்தின் சிறப்பினை உணர்வோம்

இன்று நாம் செயும் இன்வினையெல்லாம்
நன்று நமக்கு நாளை பயன் தரும்
பயமே வேண்டாம் படைத்தவன் காப்பான்.

# இவ்வுலகம் பொன்னுலகம்

வற்றாத நீருற்று
வரட்சி இல்லாப் பூஞ்சோலை
தென்றல் விளையாடும்
தென்னை மரத்தோட்டம்
வாழை இளஞ்சோலை
வளமுள்ள மாங்காடு
முந்திரிகைப் பந்தல்
முதிர்ந்த பழக்குலைகள்
தலைசாய்க்கும் நெற்கதிர்கள்
தண்ணளி சேர்நற்குரல்கள்
பால் சொரியும் பசுவினங்கள்
பண்புள்ள மனிதஇனம்
அன்பைத் தழுவிவரும்
அசையாத மன உறுதி
ஊக்கம் உயர் நினைவு
உள்ளத்தில் உண்மைநெறி
இவையாவும் உண்டாயின்
இவ்வுலகம் பொன்னுலகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித மனம்

மதுவுண்டு மயங்குகின்ற தேனீயாகும்
மதுவையே சுவைக்காத ஈயுமாகும்

பாடியே பறக்கின்ற குயிலுமாகும்
பாடாது வட்டமிடும் பருந்துமாகும்

மழையினையே பொழிகின்ற முகிலுமாகும்
மக்கள் தமை வாட்டுகின்ற வெப்பமாகும்

பற்றைதனில் ஒளிக்கின்ற முயலுமாகும்
பயமின்றித் தாவி வரும் சிங்கமாகும்

மலர்ந்து நின்று மணம் வீசும் புட்பமாகும்
மணமில்லாப் பாவைவனப் பூவுமாகும்

தாவியே படருகின்ற கொடியுமாகும்
தங்கி ஓரிடத்திருக்கும் பாறையாகும்

மகிழ்வுடனே சிரித்து நிற்கும் குழந்தையாகும்
மனமுடைந்து சினந்து நிற்கும் மங்கையாகும்

வட்டத்துள் ஓடுகின்ற குதிரையாகும்
வானத்தில் பறக்கின்ற சிட்டுமாகும்

ஓங்கி உயர்ந்த மலை உச்சியாகும்
உள்ளாழம் காணாத மடுவுமாகும்

கட்டின்றிப் புரண்டு வரும் காட்டாறாகும்
கடைசியிலே கவிசிந்தும் கவியேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்போ தோன்றின?

பரந்த வெளிகள்
அகண்ட ஆகாயம்
நீண்ட நதிகள்
நிரம்பும் காற்று
உயர்ந்த மலைகள்
உள்ளாழக் கடல்கள்
உருளும் சமுத்திரம்
உவமையில் மீன்கள்
சந்திரன் சூரியன்
சனி முதற் கோள்கள்
உயிர்ப்பன உயிரிலா
எத்தனை படைப்புகள்
இவையெல்லாவற்றிலும்
எது முதல் தோன்றிற்று?

கடவுள் படைப்பெனக்
கண்ட இவற்றுள்
மனிதன் முதலா?
மரஞ் செடி முதலா?
மிஞ்சிய முதலா?
எது முதலென்ற
ஐயம் தீர்க்க
மேலை நாட்டினர்
பரிணாமமென்ற
கொள்கையை நாட்டினர்

சமயம் என்ற
தடத்தில் பட்டோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்தம் பாட்டில்
விளக்கம் கண்டனர்
ஓமென முழங்கி
ஒரு பெருநாளில்
விண்ணில் பறந்து
விழுந்த இந்த
உலகம் தானும்
இறையது ஊதிய
இயக்கமே என்று
இந்துமக்கள்
ஏற்றுக் கொள்ளவும்
ஆதாம் ஏவாள்
அவர்களோடு
ஆனதே மற்றெலாம்
என்றனர் யூதரும்
இஸ்லாமியர் கிறிஸ்தவர்
எனப் பட்டோரும்

கனவில் யாவும்
தோன்றித் தோன்றிக்
கனவுத் தெய்வம்
வடித்ததே பாரென
அவுஸ்திரேலிய அபொறிஜினர்
அலசிக்காட்டவும்
இந்தியர் எகிப்தியர்
கொரியர் சீனர்
மத்திய ஆசியர்
செவ்விந்தியர்கள்
எல்லோர் தாமும்
இம்மண்ணிலெவ்வாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
22-11-2000
LIBRARY

மக்கள் தோன்றினர்
மரஞ் செடி தோன்றின
என்ற கதையை
எடுத்தியம்புகிறார்.

எப்போ மனிதர்
எவ்விதம் தோன்றினர்?
மரஞ்செடி முதலா?
மக்கள் முதலா?
என்ற வாதம்
எமக்கேன்? எமக்கேன்?
சீரிய வாழ்வு
சிறந்த நோக்கம்
மக்களோடு மரஞ்செடிதானும்
மிருகம் பறவை
மீனினம் யாவும்
இம்மண்ணுலகில்
இன்புடன் வாழ
வழிவகுத்திடவே
மனிதரால் முடியும்.

இருப்பினும் மனிதா
என் செய்கின்றாய்?

நச்சு வாயுவை
நாளும் கக்கி
பிராண வாயுவைப்
பிழைத்துப் பிழைத்து
மெல்ல மெல்ல
எல்லா உயிர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நசித்துப் போக
நாளும் நலிந்திட
வழியது கோலி
வாழ்ந்து கொண்டு
சகல உயிர்களும்
சலித்து மறையும்
சங்கடமான நிலையுண்டாக்கி
மானிட வாழ்வையும்
முடிக்க எண்ணினையோ?

# புதியதோர் உலகம் செய்வோம்

(1970ம் ஆண்டில் பாரீஸ் நகரில் நடைபெற்ற தமிழ் மகாநாடு நிகழ்ந்த காலத்தில் எழுதப்பட்ட பாடல்)

**அன்று-**

பொன்னி நதி வைகையதன் பொலிவைக் கண்டு
பொதிகை மலை மாமுனிவன் போற்ற வாழ்ந்து
மன்னுபுகழ் ஈழத்தின் மாண்புவந்து
மங்கையவள் சிங்களத்தைத் தங்கையாக்கி
என்னரிய தமிழ்த்தாய் நீ ஏற்றம் பெற்றாய்
இளங்கதிரின் சுடரினைப் போல் ஆற்றல் பெற்றாய்
முன்னையவர் உனை வளர்த்தார் முச்சங்கத்தே
முழங்கினார் முதிய பெரும் புலவோரெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னனைய நின்னுருவப் பொலிவு காணப்
போற்றிடுவர் நின் சங்க இலக்கியங்கள்
மின்னனைய நின் எழிலைக் காண்பதற்கோ
மிகப் பலவாம் கனவுகள் தான் காண்கின்றாரே
கன்னல் நிகர் நின் மொழியின் கனிவு கண்டோர்
கருதுமிந்தப் பூவுலகம் எங்குமுள்ளார்
அன்னவர் தாம் நின்னை அரியாசனத்தே
அமர்த்தி ஒரு புது உலகம் காண நின்றார்.

## புது உலகத்தே-

வள்ளுவத்தின் வாய்மை மொழி பேணி நிற்பர்
வகை வகையாய்த் தொழில்கள் பல செய்து
வாழ்வர்
கொள்ளத்தான் குறையாத கல்வி பேணிக்
குறை களைவர் குவலயத்துக் குணமே கொள்வர்
கள்ளத்தைக் கபடமதைக்கடிதே தள்ளி
கரவு பகை பொறாமை தனைக் களைந்து வீசி
உள்ளத்தால் உயர்ந்திடுவர் தமிழர் தாமும்
ஒற்றுமையே பெரிதென்று ஒன்றி வாழ்வர்.

தற்பெருமை தனைவிடுத்து வீரத்தோடும்
சமுதாய நலம் பேணும் ஊக்கத்தோடும்
கற்பனைத்தேன் ஊறியிடச் சொல்லால் வண்ணக்
கவிதை மலர் சொரியுமந்தச் சோலை தன்னில்
சொற்பெருக்கும் பொருட்சுவையும் சேர நாளும்
தோற்று கவி சாற்றுகவி கற்க வேண்டி
மற்றுமொழி பேசியிடு மாந்தர்தாமும்
மகிழ்ச்சியொடு தமிழ்தனையும் போற்றிக் காப்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லெனவே சதங்கை ஒலி காதிற் கேட்க
கனக மணிப் பூணாரம் வளை ஒலிக்க
எல்லவரும் ஏத்துகின்ற அரம்பை போலும்
ஊர்வசியும் மேனகையும் ஒருங்காடல் போல்
மெல்லெனவே ஜதிகூடச் சுதியும் சேர
மேவுமிள நங்கையர்கள் ஆடல் மேவக்
கல்லனைய மனந்தனையுமிளக வைக்கும்
கவினான கலைகள் பல வளருமாங்கே

சிற்பிகள் தம் கை வண்ணத் திறம் குன்றாமல்
திறமான கற்பனையோ டெழிலைக் கூட்டி
அற்புதமாம் படைப்புகளை ஆக்கி வைப்பர்
அவற்றினிலே நவரசங்கள் சொட்ட வைப்பர்
பொற்புமிகு சித்திரங்கள் புதுமையோடு
பொன் வண்ணத் தூரிகையின் போக்கில் மேவி
நற்கவிதை நலம் போல மலர்கள் போல
நவ நவமாய்க் கருத்துக்களைத் தூண்டிக்
காட்டும்

ஆண்டவனார்க் காலயங்கள் அநேகம் சேரும்
அழகுற விண் சார்ந்தினிய அமைதி கூட்ட
ஆண்களுடன் பெண்களுமே அவற்றில் ஞான
அறிவினையும் அருளினையும் ஆரக் கொள்வர்
தீண்டாமை என்னுமொரு சாபக்கேடு
திகைத் தயர்ந்து தடுமாறிச் சிதறி ஓடும்
ஈண்டிய இப்புது உலக மாந்தரெல்லாம்
இறை நிழலிற் சமமான இன்பம் காண்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேளாங்கண்ணி அம்மை

ஆழக் கடலின் அலையோசை
அன்பு தெறிக்கும் மணியோசை
அம்மையின் அற்புத அருளோசை
அமைதி நாடும் அடியோசை
அன்பர் தம் காலின் தனியோசை
அன்னையின் நிழலில் ஆறுதலை
அடைந்து நிற்பவர் பேறுகளை
எண்ணிட நாமும் முடியாது
ஏற்றுவோம் வேளாங்கணித்தாயை.

# லூர்ட்ஸ் மாதா

லூட்ஸ் மாதா கோயில் மணி
ஓசை கேட்டேன்
கோயிலிலுள்ளே மெழுகுவர்த்தி
எரியக் கண்டேன்
மெழுகுவர்த்தி ஒளியில் அவள்
முகத்தைக் கண்டேன்
லூட்ஸ் மாதா முகத்தில் அருட்
சிரிப்பைக் கண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
22-11-2000
LIBRARY

# சிற்பரமே

கண்ணே என் கண்மணியே
கற்கண்டே கடலமுதே
தேனே திரவியமே
தெள்ளமுதே சிற்பரமே

மானே மரகதமே
மதிப்பரிய ஒளிவிளக்கே
ஊனை உருக்கிடுவாய்
உள்ளொளியைப் பெருக்கிடுவாய்

திக்கற்றோர் தேடுகின்ற
தேவே பராபரமே
சிந்தனைக் கோர் ஊற்றே
சிறப்பான கற்பகமே

ஆக்கமும் நீயேதான்
அழிவதுவும் நீயேதான்
போக்கும் வரவும் இப்
புவி மீது நீயே தான்

அலையும் உலகோரின்
ஆசை பெருகாது
நிலையாய் உன் பாதத்தில்
நிறுத்தி வைத்துக் காத்திடுவாய்

**யாதுமூரே யாவருங் கேளிர்**

520028
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
22-11-2000
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

520028

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org